**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov/

Release No. 20170720T

## கிராமங்களைச் சேர்ந்த பாற்பண்ணையாளர்கள் உற்பத்தியையும், வருமானத்தையும் அதிகரிக்க உதவும் யூ.எஸ்.எய்ட்

***கொழும்பு ஜூலை 20--*** இலங்கையின் வடபகுதியிலுள்ள முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான –பெண் தலைமை தாங்கும் குடும்பத்தை சேர்ந்த கே மதனகுமாரி தனது பிள்ளைகளிற்கு உணவு வழங்குவதற்கும் உடை மற்றும் கல்வியை வழங்குவதற்கும் கடும் சிரமத்தை எதிர்கொண்டார். தனது குடும்பத்தினரிற்கு சிறந்த வாழ்க்கையை வழங்குவதற்காக அவர் கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் தனது பாற்பண்ணைக்கு நாளாந்தம் அவசியமான அடிப்படை வளங்களை பெறுவதற்கும் தனது பாற்பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கான தொழிநுட்பங்களை பெறுவதற்கும் அவர் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டார்.

2015 ஏப்ரல் 15 ம் திகதி மதனகுமாரியை அவரது கால்நடைகளிற்கான தரம் வாய்ந்த உணவுகளை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உதவியை வழங்கும் தனது வாழ்வாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகளிற்கு ஆதரவளிக்கும் (சொலிட்) நிகழ்ச்சி திட்டத்திற்கு யூஎஸ்எயிட் தெரிவு செய்தது. ஓன்றரை வருடத்திற்கு பின்னர் அவர் இரண்டு ஏக்கரில் சோளத்தை உற்பத்தி செய்கின்றார். மேலும் தடையற்ற விதத்தில் புற்களை வளர்க்கின்றார் இதன் காரணமாக அவரால் தனது ஓன்பது பசுக்களிற்கும் உணவு வழங்க முடிகின்றது மேலும் அவர் நாளாந்தம் 100 லீற்றர் பாலை பெறுகின்றார். இதன்காரணமாக இவர் நெஸ்லே லங்கா தனியார் நிறுவனத்தினால் சிறந்த பாற்பண்ணை விவசாயியாக தெரிவு செய்யப்பட்டதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அங்கீகரிக்கப்பட்டார்.

2013ம் ஆண்டு முதல் யூஎஸ்எயிட்டின் சொலிட் நிகழ்ச்சி திட்டம் மூலம் இலங்கையின் 15 மாவட்டங்களில் இருந்து பயன்பெற்றுள்ள 2000ற்கும் மேற்பட்ட கிராமப்புற பாற்பண்ணை விவசாயிகளில் மதனகுமாரியும் ஓருவர்.இந்த துறையுடன் தொடர்பட்ட தனியார் மற்றும் அரச பாற்பண்ணை நிறுவனங்களை ஓன்றிணைத்து தனது திட்டங்கள் செயற்பாடுகள் குறித்த ஆய்வினை இந்த வாரம் சொலிட் மேற்கொண்டது. இந்த திட்டம் பண்ணை பயனாளிகளின் பால் உற்பத்தியை 27 வீதத்தினாலும், வருமானத்தை 35 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

*''கிராமப்புற விவசாயிகள் பாலின் அளவினையும் தரத்தையும் அதிகரிப்பதற்கான சிறந்த நடைமுறைகளை புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவது மூலம் அமெரிக்கா அவர்களது வாழ்க்கை தரம் விற்பனை மற்றும் இலாபத்தை அதிகரிக்க உதவுகின்றது'* என யூஎஸ்எயிட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி அன்றூ சிசன் தெரிவித்தார். *''இதன் மூலம் அமெரிக்கா இலங்கையின் கிராமப் பொருளாதாரத்தை மாற்றுவதற்கு பங்களிப்பு செய்கின்றது''* என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் முன்னணி பால் நிறுவனமான மில்கோ, நெஸ்லே ஸ்ரீலங்கா, சி.ஐ.சி டயரிஸ் தனியார் நிறுவனம் மற்றும் பெல்வத்தை டேலி இன்டர்ஸ்ரிஸ் போன்ற நிறுவனங்கள் சொலி செயற்றிட்டத்திற்கு சிறந்த பங்களிப்பு வழங்கியுள்ளன. பால் உற்பத்தியாளர்களை அடையாளம் காணல், செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் வேலைத்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு விவசாயிகளை கொணரல் போன்ற அடிப்படையில் இந்த ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்த செயலமர்லிவனை ஒழுங்கு செய்தல் மற்றும் பங்குபற்றல் ஊடாக மாகாண சபை அதிகாரிகளும் இந்த செயற்றிட்டங்களில் பங்குபற்றினர்.

சொலிட்டின் பால்பண்ணை அபிவிருத்தி முயற்சிகளின் கீழ் கிராமப்புற பாற்பண்ணை விவசாயிகளிற்கு கால்நடைகளிற்கான உயர்தர உணவை வருடம் முழுவதும் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படுகின்றது மேலும் சோளம் விதைகள், பீங்கான் பீப்பாய்கள் பால் சேகரிப்பதற்கான பொருட்கள் புல்வெட்டிகள் மற்றும் வெட்டுக்கருவிகள் போன்ற இயந்திரங்கள் பொருட்களையும் வழங்குகின்றது. மேலும் பால் சேகரிக்கும், பால் பதப்படுத்தும் நிலையங்களை ஏற்படுத்தி தொடர்ச்சியாக பால் சேகரிப்பதை உறுதி செய்வதுடன் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சந்தை தொடர்புகளையும் வலுப்படுத்துகின்றது.

‘‘விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரம் குறித்த மாகாண திணைக்களங்கள் யூஎஸ்எயிட் உதவியுடனான பண்ணைகளை மாதிரி பண்ணைகளாக பயன்படுத்துவது குறித்தும், ஏனைய பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகளும் மாணவர்களும் இங்கு பயன்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளை பார்வையிட வருவது குறித்தும் நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம்’’ என யுஎஸ்எயிட் -சொலிட் தலைவர் டேவிட் அயர் தெரிவித்தார். ‘‘விவசாயிகள் மத்தியிலான கற்றல் காரணமாக நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான வீடுகளிற்கு சொலிட்டின் பயிற்சிகள் சென்றடையப்போகின்றன: எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யூஎஸ்எயிட் என்பது அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி முகவர் நிலையமாகும். உலகின் பல நாடுகளிற்கு கடந்த 50 வருடங்களாக அபிவிருத்தி உதவிகளை வழங்கிவருகின்றது. இலங்கையில் யூஎஸ்எயிட் 1956 முதல் மனிதாபிமான உதவியாக இரண்டு பில்லியன் டொலர்களிற்கு மேல் வழங்கியுள்ளது.

###